Registered as a News Paper in Sri Lanka

விலை 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 15 வெள்ளிக்கிழமை (30-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 345

நாளுக்கு நாள் மாறும்
நவ நாகரிக
ஆடை வகைகளுக்கு:
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333
(சி-2854)

## யாழ். குடாவில் கலவரம் வெடிக்கும் அபாயம்

# வடமராட்சியில் தேர்தல் வன்முறை

# ஈ.பி.டி.பி. உறுப்பினர் மீது தாக்குதல்

### மக்கள் மத்தியில் அச்சம்

(நமது நிருபர்)

பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு இன்னமும் ஐந்து தினங்கள் இருக்கையில் யாழ் குடாநாட்டில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பரவலாகத் தலை தூக்கியுள்ளது.

நேற்று பருத்தித்துறையிலும் நெல்லியடியிலும் வாகனங்களில் சென்ற இனந்தெரியாத குழுவொன்று அப்பகுதியிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின் போது காயமடைந்த ஈ.பி,டி,பி உறுப்பினர் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறையில் கட்டப்பட்டிருந்த ஈ பி டி பியின் பிரசார பதாகை இனந்தெரியாதோரால் நேற்றுக் காலை அடித்துநொருக்கப்பட்டும் ஈ.பி.டி பிஉறுப்பினர்கள தாக்கப்பட்டுமுள்ளனர்.

நெல்லியடியில் உள்ள ஈ.பி டி.பி அலுவலகம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட சமயம் ஈ.பி.டி.பியினர் ஆலயத்தை நோக்கிச் சுட்டு தாக்குதலில் ஈடுபட்டவர்களைக்

(07-ம் பக்கம் பார்க்க)

## நேற்று பூரணஹர்த்தால் யாழ் குடாநாடு ஸ்தம்பிதம்

ஊர்காவற்துறை நாரந்தனைப் பகுதியில் தமிழ்க் கட்சி கூட்டமைப்பு ஆதரவாளர் படுகொலை செய்யப்பட்டதற்கும் வேட்பாளர்கள் ஆதரவாளர்கள் தாக்கப் பட்டமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் அதனை கண்டிக்கும் வகையிலும் நேற்று யாழ் குடாநாட்டில் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலினால் இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

பாடசாலைகள் மாணவர் வரவின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. வங்கிகள அரச திணைக்களங்கள் தனியார் நிறுவனங்கள ஊழியர்களின் வரவின்றி இயங்கவில்லை வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப் பட்டிருந்தன போக்குவரத்து சேவைகள் அனைத்தும் முற்றாக செயலிழந்ததால் மக்கள நடமாட்டம் இன்றி நகரமே வெறிச் சோடியது

தேர்தல நெருங்கும்வேளையாயினும் எந்தக் கட்சியும் தேர்தல் பிரசாரத்தில்ஈடுபடவில்லை

நேற்றையதினம் பாடசாலைகள் மூன்றாம தவணைக்காக மூடபபடும இறுதி நாள் இதனால் மாணவர்கள பாடசாலைக்கு சென்று தமது பரீட்

(7-ம் பக்கம் பார்க்க)

## மகேஸ்வரனின் ஆதரவாளர்களே தாக்குதலை நடத்தியுள்ளனர்!

### செய்திக்குறிப்பில் ஈ.பி.டி.பி.தெரிவிப்பு

பருத்துறைப்பகுதியில் ஈழ மக்கள ஜனநாயகக் கட்சிக்கான தேர்தல்பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது மகேஸ்வரனின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் இந்த சந்தர்ப்பத்தின் போது தமிழர்கூட்டுக்கு சாரிபானவர்களும் உடந்தையாக இருந்துள்ளனர்;

இவ்வாறு ஈ பி டி பியினர் விடுத்த செய்தி சகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அதில்மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது நேற்று பி.பகல் 12.40மணியளவில ஈ.பி.டி.பிக்கு ஆதரவான தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருந்த சின்னராசா ஜெகதீஸ்வரன் (வயது22) சின்னராசா ஜெகன்[வயது20] சிவராசா பாபு[வயது26] ஆகியோர்மீது மகேஸ்வரனுக்கு ஆதரவான

(02ஆம பக்கம் பார்க்க)

## நாரந்தனைத் தாக்குதலில் காயமடைந்த இளைஞன் நேற்று மரணமானார்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை - நாரந்தனைப்பகுதியில நேற்று முன்தினம இடம்பெற்ற தோதல் வன்முறைச் சமபவத்தில் காயமடைந்து யாழ் போதனா வைததியசாலையில் அதி தீவிர சிகிச்சைப பிரிவில அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ்க்கட்சி கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவர் நேற்றிரவு 7.30 மணியளவில் மரணமடைந்துள்ளார்

யோகலிங்கம் கமஸ்ரன் [வயது 20, 2ம் குறுக்குத் தெரு,யாழ்ப்பாணம்] என்ற இளைஞரே நேற்று மரணமானவராவார் [ந-4]

## ஐ.தே.கட்சி ஆதரவாளர் மீது இளவாலையில் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக்கூட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம் பிக்கப் வாகனங்களில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஐ தே.க ஆதரவாளர் ஒருவர் காயம் அடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 5.45 மணியளவில் இளவாலை பொலிஸ் நிலையத்துக்கருகில் உள்ள வளவினுள இடமபெற்றுள்ளது

ஜெயசோதி ஜெயராஜ் (வயது 22 என்ற ஐ தே.க. ஆதரவாளரே கையல் காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது;

ஐ.தே.க யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் தி. மகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற பிரசாரக் கூட்டம் முடிவுற்று கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களி

(04ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் டக்ளஸின் உருவப் பொம்மை தீயிட்டு எரிக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனைப்பகுதியில் நேற்று முன்தினம் தமிழ்க்கட்சி கூட்டமைப்பு வேட்பாளர்கள மற்றும் ஆதரவாளர்கள் மீது நடத்தபபட்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உருவப் பொம்மையொன்றை அமைத்து அதனை தீயிட்டுக் கொளுத்தினர்;

தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் மாணவர்

(04ஆம் பக்கம் பார்க்க)



உண்மையான சுதந்திரமும் சகோதரத்துவமும்

சமாதானமும் மலர மீன்சின்னத்திற்கு வாக்களியுங்கள்

சுயேச்சைக் குழு

X

தம்பிராசா சுபத்திரன் (றொபேட்) ஈ. பி. ஆர். எல். எவ்.

(4-14)

# ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர் ஜெயாவைச் சந்திப்பு

(சென்னை)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் விசேட தூதுவர் ஒருவர் சென்னை சென்று அ.இ அ.தி.மு.க செயலாளர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்துப்பேசியுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது:

அடுத்தமாதம் 5 ஆம்திகதி தேர்தல் நடைபெறவுள்ளசமயம் ஜனாதிபதியின் விசேட தூதுவர் ஒருவர் செல்வி ஜெயலலிதாவை சந்தித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் என்று அரசியல் அவதானிகள் கருதியுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் கொழும்புமத்தியில் போட்டியிடும் பெரினாயகநும ஜனாதிபதியின் சிறப்புத்தூதுவராக செல்வி ஜெயலலிதாவை நேற்று முன்தினம் சந்தித்தவராவார். (வ)

# அதிரடிப் படையினரின் விசாரணைகள் விரிவு

கன்னட நடிகர் ராஜ்குமார், சந்தனக்கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்டபோது, அவருக்கு சிகிச்சையளித்த டாக்டர் பானுவையும் கர்நாடக மாநில அதிரடிப்படையினர் கைது செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நக்கீரன் பத்திரிகையின் செய்தியாளர் பாலசுப்பிரமணியம், இரகசியமாக வீரப்பனைச் சந்திக்கச்சென்றார் என்ற சந்தேகத்தின் பேரில் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஏற்கனவே சிறைப்பிடிக்கப்பட்டதமிழன் அன்றில், இனியன் ரவி ஆகியோரும் தீவிர விசாரணைகளுக்கு உட்பட்டு வருகின்றனர். [து]

# தமிழரின் போராட்டத்தை சிங்களவர் ஏற்கவேண்டும்

## வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

தமிழ்மக்களின் நியாயமான போராட்டத்தைப் பெரும்பாலான சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வதற்காகப் போராட வேண்டும் என்று வாசுதேவ நாணயக்கார விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: என்னை ஜே ஆர். ஜெயவர்த்தனா 'புலி' என்றே அழைத்தார் 1994 ஆம் ஆண்டு தேர்தலின் போது ஐ தே. கட்சியினர் என்னை 'ஈழவாதி' என்றனர். அவ்வாறெல்லாம் நாம் அழைக்கப்படுவதால் மட்டும் அக்கொள்கைகளையும் நடைமுறைகளையும் கொண்டவர்கள் அல்லர்.

தேசிய இனங்களின் உரிமைகளில் நேர்மையானஅக்கறை கொண்டஎவரும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து ஆட்சி நடத்த முடியாது. தமிழ் மக்களை சந்தோஷப்படுத்த சுயநிர்ணய உரிமைபற்றியும், புலிகள் இயக்கம் பற்றியும் பேசுவதை விட தமிழரின் தேசிய அபிலாஷைகளை உறுதிப்படுத்துவதற்கு எதிராக சிங்களவர் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தடைகளை அகற்ற சரியான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். சிங்கள பேரினவாத முதலாளித்துவ கட்சிகளால் மறுக்கப்படும் தமிழ்.முஸ்லிம் மலையகத்தமிழ் மக்களின் தேசியஅபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்களும், ஏகாதிபத்தியத்தினாலும், முதலாளித்துவ கட்சிகளாலும் மறுக்கப்படும் சிங்கள மக்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப விரிவாக்கப்பட வேண்டும். ஓர் இனம் இன்னோர் இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதைநாம் ஏற்றுக் கொள்ளப் போவது இல்லை. இலங்கை பௌத்த நாடல்ல இது இங்கு வாழும் அனைவருக்கும்உரியது, இனங்களுக்கிடையே உரிமைகள் உறுதி செய்யப்படும் போது தான் சமத்துவத்தை நிலைநாட்டமுடியும். (எ)

# இருபாலையில் உயிரிழந்தவர் புலி உறுப்பினர்

(வவுனியா)

இருபாலை டச்சுவீதிப்பகுதியில் கடந்த26ம்திகதி படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிவசுப்பிரமணியம் சசிக்குமார் (யாழ்ப்பாணம்) என்ற போராளி உயிரிழந்துள்ளாரென்று புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்தது (இ)

## மகேஸ்வரனின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வர்கள்பலத்த தாக்குதல் நடத்தியுள்ளனர் இச்சம்பவத்தில் படுகாயமடைந்த சின்னராசா ஜெகன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சின்னராசா ஜெகதீஸ்வரன், மற்றும் சிவராசா பாபு ஆகியோர்கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் பெற்றோல்நிரப்பு நிலையமொன்றில் எரிபொருள் கொள்வனவுக்காக காத்திருந்த போதே தாக்குதல் நடத்தப்பட்டதுடன் இருவரைக் கடத்தியும் சென்றுள்ளனர். [து]


# Yarl Hall கல்வி நிலையம்

93A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு-2002

தரம் 3 முதல் O/L வரை

ஆரம்பம்:

**01 - 12 - 2001**

சனி காலை 9 00 மணி

விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்

இரா. செல்வவடிவேல்

(4021)



## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

# வரவு செலவுத் திட்டம் - 2002

255 ம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 178 (3) ம் பிரிவிற்கமைவாக பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் 2002 ம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக நகர சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்

தங்கள் சேவையிலுள்ள,

அ. வின்சன் கெனடி J.P.U.M

தலைவர்,

நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை 2001. 11. 27

(C-2943)



# கண்ணீர் அஞ்சலி

அறவழிப் போராட்டக் குழுவின் இயக்குநரும் சமூக சேவையாளரும், யாழ் பல்கலைக்கழக ஊழியருமான

அமரர்

**ஏரம்பு பேரம்பலம்**

அவர்களின்

அகால மரணம் குறித்து அறவழி சமூகம் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் நெஞ்சம் நெகிழ்ந்து தெரிவிக்கின்றது.

அறவழிப் போராட்டக் குழு
NVDAG.

29, கைதடி நுணாவில்
சாவகச்சேரி.

(C-2944)



# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
## மானிப்பாய்
# மீள் கேள்வி அறிவித்தல்-2002 ஆம் ஆண்டு

31.10 2001 ஆந் திகதி வலம்புரி, உதயன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும கருவாட்டுக்கடைகள் ஆகியன குத்தகைகளுக்கு மீள் கேள்விகள் கோரப்படுகின்றன

கேள்விப்பத்திரங்கள்வழங்கப்படும் இறுதித்திகதி:- 2001:12.13 ந்திகதி நண்பகல் 12 00 மணிவரை

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 2001.12.14 ந்திகதி நண்பகல் 12 00மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி:-2001.12.14 ந்திகதி பிற்பகல் 02 00 மணி

## அட்டவணை

| குத்தகை விவரம் | மாதவாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகை (ஜி.எஸ்.ரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **01. மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1. மானிப்பாய் பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 550,000/- |
| 2. மாட்டிறைச்சிக்கடை, மானிப்பாய் | 400/- | 300/- | 1500/- | 175,000/- |
| **02. மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1. காக்கைதீவு சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம்உட்பட) | - | 300/- | 1500/- | 15,000/- |
| 2. சாவக்கட்டு சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | | 300/- | 1500/- | 75,000/- |
| 3. நவாலி பிரசாத் சந்தை, ஆட்டிறைச்சிக் கடை | 300/- | 300/- | 1500/- | 15,000/- |
| 4. ஆனைக்கோட்டை சந்தி, ஆட்டிறைச்சிக்கடை | | 300/- | 1500/ | 20,000/- |
| **3 பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம்** | | | | |
| 1. பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டிதரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 150,000 |
| 2. பண்டத்தரிப்புசந்தை, மாட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1500/- | 35,000/- |
| 3. பண்டத்தரிப்பு சந்தை, ஆட்டிறச்சிக் கடை | 250/- | 300/- | 1500/- | 15,000-/ |
| 4. பண்டத்தரிப்புசந்தை, கருவாட்டுக்கடை:இல-01 | 250/- | 300/- | 1500/- | 7,000/- |
| 5. பண்டத்தரிப்புசந்தை,கருவாட்டுக்கடை இல:-02 | 250-/ | 300/- | 1500/- | 7,000/- |
| **பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம்** | | | | |
| 1. மாசியபபிட்டி பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம உட்பட) | - | 300/- | 1500/- | 60,000/- |
| 2. மாகியப்பிட்டிசந்தை,மாட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1500/- | 12,000/- |
| 3. மாகியப்பிட்டி சந்தை, ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1500/- | 8,000//- |
| 4. இளவாலைச்சந்தை, மாட்டிறைச்சிக் கடை | - | 300/- | 1500/- | 12,000/- |
| 5. மாதகல் சந்தை, ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1500/- | 5,000/- |
| 6 மாதகல் சந்தை, மாட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 12,000/- |

குறிப்பு:- அத்துடன், கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையுடன் மேலதிகமாக பண்டங்கள், சேவைகள் வரியான 12.5%-மும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டுமென்பதையும் அறியத்தருகின்றேன்.

(வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்,ஜே. பி. யு. எம்).
தலைவர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச்செயலகம், மானிப்பாய்.
2001.11.26

(கி-2942)

# நெஞ்சை விட்டகலா நினைவுகளுடன்...

ஆண்டுகள் பல கடந்தாலும் நீண்டு கிடக்கிறது எம் நினைவுகளில் அந்த நாட்கள்!

எங்கள் சொந்த மண் கைவிடப்பட்ட பிரதேசமாகி உறவுகள் பலவும்
வெளியேறி இருந்த அந்தக் காலம்!

கூப்பிடு தொலைவில், கண்களின் பார்வைக்கு எட்டிய தூரத்தில்
யாழ்ப்பாணம் காட்சி தந்த போதும் ஓடி வரமுடியாமல் கண்ணீர் விட்டுக்
கவலைப்பட்ட அந்த வேளை!

எங்களைத் தேடி வந்து சேவை செய்தவர்கள் ஈ.பி.டி.பியின் தெய்வங்கள்!
உணவு முதல் உடனடித் தேவைகள் வரை பூர்த்தி செய்ய தொண்டர்கள்
முதல் தலைவர் பட்ட சிரமங்கள் நாமறிவோம்!

கப்பல் போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தந்து இருண்ட அந்த ஐந்து வருடங்களும்
எங்கள் உயிர் வாழ்வுக்கு உத்தரவாதம் செய்தமையை நாம் மறவோம்!

"ஐரிஸ் மோனா" பயணிகள் கப்பல் கடத்தப்பட்டபோது கைகட்டிப் பார்த்திருந்தவர்களின்
ஈனச் செயலை நாம் மன்னிக்க மாட்டோம்!

அன்று கேந்திர முக்கியத்துவம் இல்லாத தீவுப் பகுதிகளில்
இன்று வாக்குவேட்டையாட முற்படும் வேட்பாளர்களுக்கு ஒருவார்த்தை!

எங்கள் பெண்களை இழித்தும், பழித்தும் வீண் வார்த்தை பேசி விட்டு
எங்கள் வாக்குகளைக் கேட்பது என்ன நியாயம்?

எங்கள் உறவுகளையும், உடைமைகளையும் கைவிட்டு நிர்க்கதி நிலையிலிருந்தபோது
எட்டியும் பார்க்காத உங்களுக்கு எங்களிடம் வாக்குக் கேட்க என்ன உரிமை இருக்கிறது?

எங்கள் வாழ்க்கை நலனில் துளியளவும் அக்கறை இல்லாமல்

எங்கள் துயரம் தோய்ந்த நாட்களில் திரும்பிப் பார்க்காமல்

எங்களின் இன்றைய அமைதி வாழ்வுக்கும் கேடு விளைவிக்க முயல்கிறீர்கள்
வேண்டாம இந்த விஷப் பரீட்சை!!

எங்கள் இதய கோவில்களில் நாங்கள் பூஜிக்கும் எங்கள் காவலர்களை,

எங்கள வீடுகளில எங்களை வாழவைக்கும் எங்கள் தெய்வங்களை,

எவரும், எங்கும் கொச்சைப்படுத்த வேண்டாம்.

சொற்களாலோ, செயல்களாலோ களங்கப்படுத்த வேண்டாம்

இது எச்சரிக்கையல்ல ஆலோசனை மட்டுமே.

ஏனெனில் சாது மிரண்டால் காடு கொள்ளாது.

**தீவக கடற்றொழிலாளர் வடக்கு சமாசம்**
**தீவக கடற்றொழிலாளர் தெற்கு சமாசம்**

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
[ஈ. பி. டி. பி.]

(இ-2946)

# தேர்தல் கண்காணிப்பாளர்கள் வேட்பாளர்கள் கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கண்காணிப்பாளர்களாகப் பணியாற்ற வந்துள்ள ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுக்கும் யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளின் வேட்பாளர்களுக்குமிடையேயான கலந்துரையாடல் அண்மையில் நல்லூரில் உள்ள ஜி.ரி. இசற் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளான றெபேட் பிறெகிம், ஜெரால்ட் லீமறாக் ஆகியோருடன் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு வேட்பாளர்களான அ. விநாயகமூர்த்தி சுரேஸ் பிரேமச்சந்திரன் ஐக்கிய தேசியக் கட்சியின்யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் தி. மகேஸ்வரன் ஈ,பி, ஆர்,எல்,எவ் சுயேட்சைக்குழு முதன்மைவேட்பாளர்த,சுபத்திரன் ஆகியோர்பங்குகொண்டனர்.

இக் கலந்துரையாடலில் கட்சிவேட்பாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டவிடயங்கள் வருமாறு

நெடுந்தீவில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளது,

தீவுப்பகுதியில் தேர்தல்முகவர்களை அனுப்ப முடியாத சூழ்நிலை உருவாகுமானால் அங்கு கள்ள வோட்டுக்கள போடப்படுவதை நிறுத்தமுடியாத நிலைமை ஏற்படும்,

நெடுந்தீவில்பொலிஸ்நிலையம் ஒன்று அமைத்துச் செயற்படவேண்டும்,

400 வாக்காளர் அட்டைகளை ஆயுதக்குழுவொன்று பணம் கொடுத்துப் பெற்றுள்ளது,

தெரிவத்தாட்சி அலுவலராக பொதுவான ஒருவரும் நியமிக்கப்படவேண்டும்.

தேர்தல் தினத்தன்று தனியார்வாகனங்களைபயன்படுத்த அனுமதிக்கப்படக் கூடாது,

சென்ற தேர்தலில் இடம்பெற்ற முறையீடுகளை இம்

[09ம் பக்கம் பார்க்க]

## நயினாதீவு

## ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் சபை-2002

மேற்படி கோவிலுக்கு 2002ம் ஆண்டிற்கான வழிபடுநர் சபை உறுப்பினர்களாகச் சேர விரும்பும் அல்லது புதுப்பிக்க விரும்பும் கீழ்காணும் தகைமையுள்ள சகல வழிபடுநர்களும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தை ''பொருளாளர் ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு'' என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று விண்ணப்பத்துடன் சேர்த்து 2001ம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தோராம் திகதி (31-12-2001) மாலை 5.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாகச் 'செயலாளர் ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு'' என்ற முகவரியிட்டு கடித மூலம் அனுப்புமாறு அல்லது கோவில அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் வழிபடுநர் சபை உறுப்புரிமை விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

### வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்

1. அ. விண்ணப்பம அனுப்பவேண்டிய கடைசித் திகதியில் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும்.
   ஆ. இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்.
   இ. நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநராகவும்
   ஈ. இலங்கை குடியரசில் நிரந்தரமாகவசிப்பவராக இருக்கும் ஒருவரே அங்கத்தவராக இருக்கத் தகுதி உடையவர் ஆனால் அப்படிப்பட்ட ஒருவர்.
2. அ. தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினமநடைபெறும்நான்கு கால நித்தியபூசை ஒன்றின்உபயகாரராக இருப்பாராயின் அல்லது
   ஆ. தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மகோற்சவ திருவிழாக்கள் உட்பட்ட எந்த ஒரு விசேடநைமித்திய உற்சவ பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும்மேற்கூறிய நித்திய விசேட நைமித்திய பூசைகள், திருவிழாக்கள்,மகோற்சவம் ஒன்றை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவினராலோ வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரிமை 2 (அ) அல்லது (ஆ) கூற்றின்படி அக் குடும்பமோ அல்லது அவ்வகுப்பினரோ தம் தமக்குள் வயதுவந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை வழிபடுநரின் சபைக்கு அங்கத்துவராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப் பணமாகரூபா பத்து(10/-) செலுத்தலாம், அத்தகைமையற்றவர்கள் மேற்படி உறுப்புரிமை (அ) அல்லது (ஆ) வின்படி
   இ. தனது விண்ணப்ப படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா 50/- (ஐம்பது) ''பொருளாளர் ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபாற்கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல் வேண்டும். அத்துடன் எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும் இக்கோவிலில் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகள் பெறாத ஒருவராகவும் இக்கோவிலில் இலாபகரமாகஎவ்வித வேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:

விண்ணப்பதாரியின் கையொப்பம் ஒரு சமாதான நீதவான் இந்து மதகுரு இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர் அல்லது அரசாங்கப் பாடசாலை அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான றபர் முத்திரை இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ரூபா 5/- செலுத்தி உரிய விண்ணப்பப் படிவத்தை கோவில் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

நன்றி

அன்னையின் சேவையில்

கனக. உருத்திரகுமாரன் (B. A. DIP.IND)
கௌரவ செயலாளர்
அறங்காவலர் சபை,
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(C-2941)

## இராசி பலன்

30-11-2001
(கார்த்திகை 15, வெள்ளி)
பூரணை பி.இ 3 13வரை
கார்த்திகை பி ப 6 39 வரை
ராகுகாலம் 10 44 - 12.14
சுபநேரம் 6.14 - 7.44
பூரணை விரதம் திருக்கார்த்திகை விரதம், சர்வாலய குமாராலய தீபம்

**மேடம்**
வாக்குக்கலகம், தனவிரயம் மாதர் உதவி, காரியதாமதம்

**இடபம்**
மனக் குழப்பம், முயற்சிகைகூடும், பெரியோர் மதிப்பு போசன சுகம்.

**மிதுனம்**
காரிய அலைச்சல், நித்திரைக் குறைவு, கோபப்படுதல் சுபசெலவு.

**கடகம்**
காரிய அனுகூலம், தெய்வ தரிசனம், கீர்த்தி, குடும்ப சுகம்.

**சிங்கம்**
தொழில் மேன்மை, அதிகாரம, முயற்சி கைகூடும், அப கீர்த்தி.

**கன்னி**
பிரயாணம், கட்டுப்பாடு, முயற்சிதாமதம், புதியதிட்டமிடல்,

**துலாம்**
எதிர்பாராத பிரச்சினை, உடல் வியாதி, பிரயாண பயம், காரியதடங்கல்.

**விருச்சிகம்**
குடும்பநன்மை, முயற்சிகைகூடும், ரோகம், நல்ல வரவேற்பு.

**தனுசு**
தொழில் விருத்தி, எதிரிகளால் நன்மை ஆரோக்கியம் காரியம் கைகூடும.

**மகரம்**
குடும்பக்கவலை, எதிர்பாராதநன்மை தாழ்ந்தசுபாவம் வியாபார முன்னேற்றம்.

**கும்பம்**
உடல்சோர்வு, அதிகாரிகள் மனஸ்தாபம், முயற்சி கைகூடும், அரச ஆதரவு.

**மீனம்**
இனிபசம்பவம், கூட்டு முயற்சி பொருளசேர்க்கை காரியம் கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## டக்ளஸின்...

சன் - வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உருவம் போன்ற பொம்மையொன்றை அமைத்து, அதனை சூழ மாணவர்கள் கூடியிருந்து. பறைமேளம் முழங்க ஒப்பாரி வைத்தனர்.

பின்னர் அதனை ஊர்வலமாக வளாகத்தில் எடுத்துச் சென்றனர். அப்போது அவ் உருவப் பொம்மைக்கு கல்லெறிந்தும் தமது எதிர்ப்பை மாணவர்கள் வெளிப்படுத்தினர்

அத்துடன் 'டக்ளஸ் ஒழிக' 'சந்திரிகாவின் அடியாளே ஒழிக' போன்றகோசங்களையும் மாணவர்கள் எழுப்பினர்

பல்கலைக்கழக முன்றலில் அவ் உருவப் பொம்மைக்கு தீயிட்டு கொளுத்திய மாணவர்கள் அங்கு பொதுக் கூட்டமொன்றையும் நடத்தினர் இதேவேளை பல்கலைக்கழக வளாகத்தை சுற்றி ஊழியர் பேரம்பலத்திற்கு அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் பதாதைகள் என்பனவும் ஒட்டப்பட்டிருந்தன. (இ-2-104)

## ஐ,தே,கட்சி

யடையே ஆதரவுக் கையெழுத்துக்களை பெற்றுக் கொண்டிருந்த சமயம் பிக்கப் வாகனத்தில் வந்த ஆயுததாரிகள் தம்மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக யாழ் மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்திற்கு ஈ பி டி பியினரே பொறுப்பேற்க வேண்டுமெனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன [ந-4]


பிமல் ஆயுள்வேத தயாரிப்புக்களின் யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்களான

**சிவா நறுமணப் பூங்கா ஆதரவில்**

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306-B
பிராந்தியம் 10 சார்ந்த
சுன்னாகம் கோப்பாய் மானிப்பாய்-கோவிற்பற்று
நல்லூர்-வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகங்கள்
இணைந்து
மாவட்ட சுகாதார தினத்தை முன்னிட்டு
நடத்தும்

**சித்த மருத்துவ கருத்தரங்கு**

**விடயம்:** தொய்வு நோய்க்கான (அஸ்த்துமா) சித்த மருத்துவ முறைகள்

**திகதி:** நாளை (01-12-2001) சனிக்கிழமை பி. ப. 3.00 மணி

**இடம்:** மானிப்பாய் மகளிர் கல்லூரி

தலைமை:
**லயன் செ. ஞானராஜா**
(பிராந்தியத் தலைவர்-பிராந்தியம் 10)

பிரதம விருந்தினர்
**லயன்சீமாட்டி வைத்திய கலாநிதி மிதிலைச்செல்விஸ்ரீகாந்தன்**
(தலைவர் சித்த மருத்துவ பிரிவு-யாழ்.பல்கலைக்கழகம்)

கௌரவ விருந்தினர்கள்:
**லயன் வைத்திய கலாநிதி S. S. அருளானந்தம்**
(மாவட்டத் தலைவர்-சுகாதாரம்)
**லயன் வைத்திய கலாநிதி V. தியாகராஜா**
(மாவட்டத் தலைவர்-குழந்தைகள் பராமரிப்பு)

சிறப்பு விருந்தினர்:
**திரு. து. குருநாதசிவம்**
(உரிமையாளர் - சிவா நறுமணப் பூங்கா)

கருத்துரை வழங்கும் மருத்துவர்கள் குழு:
**லயன் வைத்திய கலாநிதி பூரண பசுபதிப்பிள்ளை உரோ மகேஸ்வரன்**
(முன்னாள் வடகிழக்கு மாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளர்)
**லயன் வைத்திய கலாநிதி பொன் இராமநாதன்**
(விரிவுரையாளர் சித்த மருத்துவ பிரிவு யாழ் பல்கலைக்கழகம்)
**செல்வி சசிவதனி சச்சிதானந்தன்**
(உள்ளக பயிற்சி வைத்தியர் சித்த ஆயுள் வேத போதனாசாலை-கைதடி)
**செல்வி மேகலை சிவசுப்பிரமணியம்**
(உள்ளக பயிற்சி வைத்தியர் சித்த ஆயுள் வேத போதனாசாலை-கைதடி)

கருத்தரங்கினைத் தொடர்ந்து சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மல்லாகம் மகாவித்தியாலய மாணவர்கள் வழங்கும் எயிட்ஸ் என்னும் உயிர் கொல்லி என்கின்ற வில்லிசைப்பாட்டு நிகழ்ச்சி இடம் பெறும்.

இந்நிகழ்வில் கலந்து பயன் பெறும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். நகரின் முன்னணி ஆயுள் வேத சித்த மருத்துவ விற்பனையாளர்களான சிவா நறுமணப் பூங்கா ஸ்தாபனத்தாரின் அஸ்த்துமா நோய்களுக்குரிய மருந்துகள் கருத்தரங்கில் பார்வைக்கு வைக்கப்படும்.

[4022]

## இன்று ஒரு தகவல்

# எப்படியும் கிடைக்கும்

ஏழைப் பிச்சைக்காரன் ஒருவன் நாள் தோறும் சிவன் கோயிலுக்குச் சென்று தன் வறுமையைத் தீர்த்து அருளுமாறு வேண்டிக் கொண்டு இருந்தான். இப்படியே பல நாட்கள் கடந்தன. தன் அடியவன் மீது இரக்கம்கொண்ட சிவபெருமான் தன்மகன் பிள்ளையாரிடம் ''இவனுக்கு ஒருலட்சம் ரூபாய் கிடைக்க அருள்செய்'' என்றார் ''ஒரு வாரத்தில் எப்படியும் கிடைக்கச் செய்கிறேன்'' என்றார் பிள்ளையார். இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்ததைப் பெருஞ் செல்வனான கருமி ஒருவன் கேட்டான்.

'' அந்தப்பிச்சைக்காரனுக்குக் கிடைக்கும் ஒருலட்சம் ரூபாயை எப்படியும் அவனிடமிருந்து வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தான் அவன். பிச்சைக்காரனிடம் சென்ற அவன், ''இந்த ஒருவாரத்தில் உனக்கு என்ன கிடைத்தாலும் எனக்குத் தருவதாகச் சொன்னால் நான் உனக்கு இப்பொழுதே பத்து ரூபாய் தருகிறேன். பிறகு பேச்சு மாறக் கூடாது'' என்று இனிமையாகப் பேசினான்.

எச்சில் கையால் கூட காகத்தை ஓட்டாத கருமி இவன். எனக்குப் பத்து ரூபாய் தருகின்றானென்றால் ஏதோ இவனுக்குப் பெரிய வருவாய் இருக்க வேண்டும் என்று நினைத்த பிச்சைக்காரன் வேண்டாமென்று மறுத்தான். கருமியும் விடவில்லை. தொகையை ஏற்றிச் சொல்லிக் கொண்டேவந்தான் பிச்சைக்காரன். மறுத்துக் கொண்டேவந்தான். ''ஐம்பதாயிரம் தருகிறேன்'' என்றான் கருமி. பெருந்தொகையான அதை மறுக்க இயலாமல் ஏற்றுக் கொண்டான் பிச்சைக்காரன். ஒருவாரம் கழிந்தது. ஒரு லட்ச ரூபாய் கிடைக்கும் நாள் என்ற மகிழ்ச்சியில் பிச்சைக்காரனை அழைத்துக் கொண்டு சிவன் கோயிலுக்குப் புறப்பட்டான் அவன். கோயில் கதவில் காதை வைத்து உள்ளே என்ன பேசிக் கொள்கின்றனர் என்பதைக் கேட்டான் அவன். ''மகனே! அந்தப் பிச்சைக் காரனுக்கு ஒரு லட்சம் ரூபா தருவதாகச் சொன்ன கெடு இன்றோடு முடிகிறதே தந்து விட்டாயா?' என்று கேட்டார் சிவபெருமான்.

ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த கருமிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஒரே வாரத்தில் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு ஐம்பதாயிரம் ரூபா லாபம் என்று நினைத்தான். ''தந்தையே! ஏற்கனவே அவனுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கருமி ஒருவனிடமிருந்து கிடைக்கச் செய்து விட்டேன்'' என்றார் பிள்ளையார். ''மீதித் தொகைக்கு என்ன செய்யப் போகிறாய்? என்றார் சிவபெருமான் நாம் பேசுவதை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக்கும் அதே கருமிதான் மீதி ஐம்பதாயிரத்தையும் தர வேண்டும். அப்படித் தராவிட்டால் கோயில் கதவோடு ஒட்டிக் கொண்டிருக்கும் அவன் காது அந்தத் தொகை கொடுத்தால் தான் எடுக்கவரும் என்றார் பிள்ளையார்.

அதிர்ச்சி அடைந்த கருமி அங்கிருந்து ஓடிவிட முயற்சி செய்தான், கதவோடு அவன் காது ஒட்டிக் கொண்டிருந்ததால் அவனால் அந்த இடத்தை விட்டு அசைய முடியவில்லை. வீட்டிலிருந்து தன் மகனை அழைத்து வரச் சொன்னான் கருமி. மகன் வந்ததும் அவனிடம் பிச்சைக்காரனுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் தரச் சொன்னான் ஐம்பதாயிரம் ரூபாயைப் பிச்சைக்காரன் பெற்றதும் கருமியின் காது விடுபட்டது.

பேராசிரியர் எ. சோதி

ஆளும் அரசையும்

# ஐ.தே.கவையும் பின்தள்ளிவிட்டு

# ஜே. வி.பி ஆட்சிபீடமேற வாய்ப்பு

## கருத்துக்கணிப்புகள் மூலம் கண்டறிவு

[கொழும்பு]

நாட்டில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் செல்வாக்கு குறைந்து வருவதாகி கொழும்பு பல்கலைக்கழக ஆய்வு தெரிவிக்கிறது.

கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான ஆய்வுச் சமூகம் அண்மையில் எடுத்த கருத்து கணிப்பின்படி தென்பகுதியில் பெரும்பான்மைக் கட்சிகளென்று சொல்லிக்கொள்ளும் ஐ.தே.கவுக்கும் பொ.ஐ. முன்னணிக்கும் ஆதரவு குறைந்துள்ளனவென்றும்,

ஜே.வி.பிக்கு செல்வாக்குக் கூடியிருப்பதாகவும் தெரிவிக்கிறது. [து]

## சுவரொட்டிப் போட்டி

(தும்பளை)

உலக நீர்தினத்தையொட்டி இலங்கை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரசபை பாடசாலை மாணவர்களிடையே சுவரொட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

ஆக்கங்களை மக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர், தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு த.பெ. எண். 14 கல்கிசை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது; (உ-239)

## தொ.க.பயிற்சி பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம)

கடந்த ஆண்டுநடைபெற்ற தொலைக்கல்விப பயிற்சி இறுதிப் பரீட்சை இரண்டாம் பகுதிக்கான முடிவுகள் வெளிவந்துள்ளதென்றும அப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழைப்பெறுவதற்கு விண்ணப்பப்படிவம அனுப்ப வேண்டியுள்ளதால இன்று காலை 9.00 மணிக்கும 11.00 மணிக்கும் இடையில் யாழ். இந்துக்கல்லூரியில இயங்கும் தொலைக் கல்வி பயிற்சி நிலையத்திற்கு சமபந்தப்பட்டவர்களை சமுகமளிக்குமாறுயசிரேஷ்டபோதனாசிரியர் தெரிவித்துள்ளார்;

முன்னர் பரீட்சையில் சித்தியடைந்து சான்றிதழைப் பெறாதவர்களையும் அன்றைய தினமசமுகமளிக்குமாறு மேலும அவர் தெரிவித்துள்ளார். (எ)

மாணவர் கல்வி வளர்ச்சியில்

# மக்கள் வங்கி மிகுந்த அக்கறை காட்டுகிறது

## இளம்பிறைநாதன் தெரிவிப்பு

[தென்மராட்சி]

மக்கள் வங்கி வர்த்தக வங்கியாக இருக்கின்ற போதிலும் கூட மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகுந்தஅக்கறை கொண்டுள்ளது. அதன் வெளிப்பாடாகவே க.பொ.த சாதாரணதர பரீட்சையில் தேசியமட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் அதியுயர் புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை அமுல் செய்து வருகின்றது.

மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளரான எஸ். இளமபிறைநாதன் சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் முதன்மை விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றும் போது இவ்வாறுகுறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் எஸ். தனபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடவலய உதவிப் பொது முகாமையாளர் க.பொ.த. பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவனான சத்தியமூர்த்தி சத்தியரூபனுக்கு புலமைப்பரிசில் திட்டத்துக்கான ஆவணங்களை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இவ் வைபவத்தில் மக்கள் வங்கியின் வடவலயபிராந்திய முகாமையாளர் எம். கே. சிவபாதவிருதயரும் கலந்து கொண்டார். (உ-77)

# நீதியான விசாரணைக்கு கூட்டமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில நேற்று நடைபெற்ற சமபவம்தொடர்பாக நீதியான விசாரணைகளை நடத்த வேண்டுமென தமிழ் கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமபவம் தொடர்பாக ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற வேண்டும் என்பதுடன் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சந்திரிகா இதற்குப பொறுப்பேற்று பதவிவிலகவேண்டுமெனவும, கோரிக்கை விடுத்தனர். (உ-5,10)

# பொலிஸ் நிலையம் மீது புலிகள் தாக்குதல்

## மூவர் படுகாயம்

(கொழும்பு)

கெப்பிட்டிப்பொலாவமஜா நந்தியாவ பொலிஸ் நிலையத்தின் மீதுநேற்று விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில 3பொலிஸார்காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் மீதுதிருப்பித் தாக்கியதில்புலிகள் தரப்பிலும் இழப்புகள் நேர்ந்திருக்க கூடுமஎனகெப்பிட்டிப்பொலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர் [உ-7]

# கொடுத்த பொருளை வாங்குவதில் தகராறு 4 பெண்கள் படுகாயம்

(மந்திகை)

இருபது வருடங்களுக்குமுன் கொடுத்த பொருளை மீள கேட்டவேளை உறவினர்களுக்கிடையேஏற்பட்ட கடுமையானவாக்குவாதம் கைகலப்பு வரை சென்றதில்இருகுடும்பங்களைச் சேர்ந்த நான்குபெண்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை துன்னாலை கலிகைச்சந்திக்கு அண்மையில் நடைபெற்றது

இச்சம்பவத்தில் பழனி செல்வதி (வயது-43 சிவகுமார் நிர்மலா தேவி (வயது 7) ஆனந்தராசா இராஜயோகம் (வயது-50) ஆனந்தராசா கவிதா (வயது-20) ஆகியோர் படுகாயமடைந்தநிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-2)

## சாரணிய பயிற்சி

(மீசாலை)

திருநெல்வேலி விவசாயக் கல்லூரியில் இன்று காலை 8மணிமுதல் இரண்டுநாட்களுக்குசாரணியப்பயிற்சி நடைபெறவிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட சாரணிய ஆணையாளர் அறிவித்துள்ளார். (வ-229)

## தங்கச்சங்கிலி திருட்டு

(துமபளை)

வைத்தியசாலைக்குச் சென்றுதிரும்பிய இளம்பெண்ணின் தங்கச் சங்கிலியை பட்டப்பகலில்அபகரித்துச்சென்ற சம்பவம அண்மையில் தும்பளைப் பகுதியில் இடம் பெற்றது.

தும்பளைதெற்கைச்சேர்ந்த இராசப்பு மேரிகதரீன் என்பவருடைய தங்கச் சங்கிலியே இவ்வாறு பறித்துச் செல்லப்பட்டது. [உ-246]

## கூட்டம் பிற்போடப்பட்டது

[தென்மராட்சி]

தென்மராட்சி முனபள்ளி ஆசிரியர் சங்ககூட்டம தவிர்க்க முடியாத காரணத்தினால் திட்டமிட்டவாறு இன்று நடைபெறமாட்டாது எனவும்,

டிசம்பர் 12 ஆம் திகதி நடைபெறும் எனவும் செயலாளர் திருமதி ஆர். மீனலோஜினி தெரிவித்துளளார் (உ-77)

# காயமடைந்தோரைப் பார்வையிட யாழ்.வைத்தியசாலையில்

## உறவினர்கள் முண்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

நாரந்தனையில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில காயமடைந்தோரின்நிலைமையைஅறிவதற்காக, அவர்களது உறவினர்களும் தமிழ்க்கட்சி கூட்டமைப்பின் ஆதரவாளர்களும் பெருமளவில் யாழ். போதனாவைத்தியசாலை வளாகத்தில் கூடி நின்றனர்.

வைத்தியசாலை வாயில்களைஆதரவாளர்களும் உறவினர்களும்மற்றும்வாகனங்களும் முற்றுகையிட்டிருந்தன.

இதனால் வைத்தியசாலையில் பெரும் நெருக்கடி நிலவியது. இவர்களைக் கட்டுப்படுத்த வைத்தியசாலைபாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள பெரும சிரமமடைந்தனர்.

தமிழ்கட்சிக் கூட்டமைப்பு பிரசாரவாகனங்கள் நேற்று முன்தினம நகரப்பகுதியெங்கும கறுப்புக் கொடியுடன் வேகமாகஓடித்திரிந்தன. (இ-104-106)

## சிந்தனைக்கு விருந்து

### செய்வது அறியாது விழித்தார்

பக்கத்து வீடுமிகப் பற்றி எரிகையிலே
'சிக்கல் ஏன?' எனஇருந்த சீமானின் -
வைக்கோற்போர்
மீது பொறிவீழ்ந்து வேலியிலும் தாவியதால்
'யாதுசெய' என்றுவிழித் தார்.

பழையவன்

# உயர்தர மாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல 85. தொகுப்பு ரீ. மயூரன்

### பொது அறிவு

★ **சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1) 11 ஆவது 'சார்க்' உச்சி மாநாடு அடுத்த வருடம் ஜனவரியில் எங்கு நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது?
   1. இலங்கை 2. நேபாளம்
   3. பாகிஸ்தான் 4. பங்களாதேஷ்
2) ஒளியின் வேகத்தை முதலில் கணித்தவர் யார்?
   1. ஃபிசேயஸ் 2. லான்ட்ஸ்ரெயினர்
   3. ஜோர்ச் ரோமல் 4. போர்
3) கோள்களில் 'எதிர்ப்பக்கமாக' சுற்றும் கோள் எது?
   1. புளூட்டோ 2. சுக்கிரன்
   3. யூரேனஸ் 4. புதன்
4) ஒரு பிரபஞ்ச வருடம் [Cosmie year] எத்தனை ஆண்டுகளைக் குறிக்கும்?
   1. 100 கோடி ஆண்டுகள் 2. 100 ஆண்டுகள்
   3. 25 கோடி ஆண்டுகள் 4. 250 ஆண்டுகள்
5) ஒரு நிறுவனம்/கட்டடத்துள் மாத்திரம் கணனிகள் வலைப்பின்னல் மூலம் இணைக்கப்படுவதை எவ்வாறு அழைப்பர்?
   1. WAN 2. RAN 3. LAN 4. BAN

★ **சுருக்கமான விடை தருக.**

6) ஐ நா சபையில் இலங்கை எத்தனையாம் ஆண்டு இணைந்து கொண்டது (— — — — —)
7) பிரபல ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியர் எந்த ஆண்டில் உயிர் நீத்தார்? (— — — — —)
8) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்து நதி எந்த இரு நாடுகளுக்கூடாக பாய்கின்றது (— — — —)
9) 1931 ஆம் ஆண்டு இலங்கையில் நடைமுறைக்கு வந்த அரசியலமைப்பு எது (— — — —)
10) இலங்கையில் நிலக்கரி கிடைக்கும் இடம் எது? (— — —)

★ **இலங்கையில் காணப்படும் பின்வரும் நிறுவனங்கள்-அமைப்புக்கள் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) இலங்கை வணிகர் கழகம் — — — —
12) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (C.W.E — — —
13) தேசிய பொதிகட்டல் நிலையம் — — —
14) இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி — — —
15) தேசிய அபிவிருத்தி வங்கி — — — — —

★ **பின்வருவன எந்நாடுகளில் காணப்படுகின்றன என எழுதுக.**

16) ஏஞ்சல் நீர் வீழ்ச்சி — — —
17) நயக்கரா நீர் வீழ்ச்சி — — — —
18) எறிபஸ் எரிமலை — — — —
19) விக்டோரியா ஏரி — — — —
20) பறேட்டாலிங் நதி — — — —

### நுண்ணறிவு

★ **பின்வரும் எண் தொடர்கள் ஒவ்வொன்றிலும் அடுத்து வர வேண்டிய உறுப்பை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

21) 30, 22, 14, 06, — — — — — —
22) 1, 2, 6, 22, — — — — — — — —
23) 16 72, 38, 94, 60, — — — — — — —
24) 21, 5, 16, 12,
    03 19 8 12 — — — — — — — — —
25) 60 2, 30, 4, 15, — — — — — — —

★ **26 30 வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையை துணை கொண்டு விடை அளிக்க.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| U | H | C | N | A | M | T | G | K | X |

**பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை 'குறியீட்டிலேயே' தருக.**

26) (MAN) + (UHC) = — — — — —
27) (AN−UX) + (CAN = — — —
28) (CH+CN A) + TG+KX) = — — — —
29) (ANT −(CUN = — — — — —
30) (GUN) × m/c= — — — — —

★ **பின்வரும் வினாக்களில் உள்ள சொற்களில் காணப்படும் எழுத்துக்களை மாற்றி அமைப்பதன் மூலம் கருத்துடைய சொற்களை ஆக்கி புள்ளிக் கோட்டில் எழுதுக.**

31) புதுபொது எவிரி: — — — — — —
32) புழி வாய் செப்தந்: — — — — — —
33) வரலறை யயான: — — — — — — —
34) பாலறறதள: — — — — — — — —
35) வை ஆபபர: — — — — — — — — —

★ **கீழே தரப்படும் சொல் நிரலைப் பாவித்து அதன் கீழ்உள்ள வினாக்களுக்கு விடைதருக.**

| | |
|---|---|
| அணங்கு | விட்டம் |
| வற்றல் | சினப்பு |
| குசலம | விமிசம |
| அப்பு | வற்தனை |
| கன்மம் | மனோன்மணியம் |
| குமுதம் | ஞாக்ஞும் |

**கீழ் உள்ள சொற் தொடர்கட்கு பொருத்தமான சொல்லை நிரலில் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

36) சந்ததி அல்லது பரம்பரை: (— — — — —)
37) சாபம் தீர்ப்பது தரணியில் உள்ளது: (— — — —)
38) தெய்வப் பெண் அல்லது அச்சம் எனும் பொருள் கொடுப்பது: (— — — — —)
39) நீரில் மலரும் பூக்களில் ஒன்று: (— — — —)
40) விருப்பமுதபோதெழும் உணர்வு: (— — — — —)

**குறிப்பு:-** விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும், இதற்கான விடைகளை 05 12.2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத் தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## அறிவியல் பகுதி வினா இல: 85

"வலம்புரி"
இல: 15 வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ________________

சொந்த முகவரி: ________________

கற்கும் பாடசாலை ________________

மாணவர் கையொப்பம்:

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## அறிவியல் வினா இல-84 விடைகள்

1) ஒக்சல
2) சீனி
3) மத்தியதரைக் கடல்
4) பர்மா
5) மெசினா நீரிணை
6) ஹெபன கெல்லர்
7) நியுயோர்க்
8) சமாதானம்
9) விற்றன்பேர்க்
10) மௌரியர்
11) ✓
12) ✗
13) ✓
14) ✓
15) ✗
16) ஜோன்றோஜி பெயல்ட்
17) உவாற்றமன்
18) மைக்கல் பரடே
19) சேர் ஏறால்ண்டில்
28) எல் மாகுரே
21) 15
22) $3\frac{1}{2}$
23) 10
24) 2
25) 15
26) 1
27) 1
28) 2
29) 2
30) 3
31) சடுகுடு
32) வீடு
33) அந்தம்
34) மேகம்
35) 880
36) (iii)
37) (v)
38) (iv)
39) (ii)
40) (i)

## தியவதன நிலமேயின் வீட்டுக்கு குண்டு வீச்சு

[கொழும்பு]
கண்டி தலதாமாளிகைக்கு அருகிலுள்ள தியவதன நிலமே நிறஞ்சன் விஜயரத்தினாவின் வீடு நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத நபர்களினால் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இரவு எட்டு மணியளவில் வந்த இனந் தெரியாத நபர்கள் குண்டொன்றை வீசிவிட்டு சென்றதாக நிறஞ்சன் விஜயரத்தினாவின் பாரியார் வேதிக்கா விஜயரத்தினா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தின் போது இருபிள்ளைகளோடு தான் வீட்டில் இருந்ததாகவும் எவருக்கும் காயமெதுவும் ஏற்படவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
[உ-4]

### அறிவியல் வினா இல.84 அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

★ சி. சயந்தன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

★ ஐ. காஞ்சனா, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

★ வி. தமிழ்செல்வி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

★ த மூதினி, உரும்பிராய்

★ கி. கார்த்திகா, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

★ அ தீபன், அளவெட்டி.

★ பு. கோபிரஜ் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி.

★ ர. கேசவன், கொக்குவில் இந்துக் கல்லூரி.

★ சி. சயந்தன், வட்டுக்கோட்டை.

★ இ. சாந்தினி, அராலி.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளினதும் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மாவட்ட தாய்ச் சங்க நிர்வாகிகளுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மு ப 10.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் முக்கியமான பலவிடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட இருப்பதனால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் க. குமாரசாமி அறிவித்துள்ளார்.
(உ)

## எழுதுமட்டுவாழில் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)
எழுதுமட்டுவாழ் முன்னரங்க காவலரண் பகுதியை நோக்கி, விடுதலைப் புலிகள் மேற் கொண்ட ஷெல் தாக்குதலினால் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

அண்மையில் மாலை 5.30 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் காவலரணில் கடமையிலிருந்த பீ. ஜி இரட்ணாயக்கா (வயது 19) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தவராவார்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த இவரது சடலத்தை கொழும்புக்கு எடுத்துச் செல்ல அனுமதியளித்த சாவகச்சேரி பதில் நீதவான் அ. பிறேம்சங்கர், பிரேத பரிசோதனை மேற்கொண்டு மரணவிசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.
(இ)

## பொ.ஐ.மு. ஆதரவாளர் சுட்டுக் கொலை

(புத்தளம்)
புத்தளம் மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் டி.எம். திஸநாயக்காவின் ஆதரவாளர் ஒருவர் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவருடன் சேர்ந்து பொது ஜன ஐக்கிய முன்னணியின் 6 ஆதரவாளர்கள் இதுவரை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
(உ-5)




பொதுத் தேர்தல்-2001
தமிழேழுச்சு-சேவையே வாழ்வுஎனக்கள் கூட்டுறவாளன்
திரு. சி. சிவமகாராசா அவர்களுக்கே எம் வாக்கு
தமிழர் விடுதலைக் கூட்டணி
(C - 2921)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
மாபெரும் பிரசாரக் கூட்டம்

இடம்:- கோண்டாவில் ஸ்ரீ நாராயணன் கோவில் அருகாமை
காலம்:- இன்று (30 - 11 - 2001) மாலை 4.00 மணி
குறிப்பு:- ஈ. பி. டி. பியின் முக்கிய பிரமுகர்களும் வேட்பாளர்களும், கோண்டாவில் வாழ் பெரியோர்களும் உரையாற்றுவர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஈ.பி.டி.பி
யாழ்மாவட்டம்.
[கி-2949]

க. மணிபல்லவராஜன்
(நிஷாந்தன்)
வேட்பாளர்


# கிரனைட் வீச்சுக்கு யாழ். பல்கலை ஊழியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர் விடுதி மீது நேற்று முன் தினமிரவு கிரனைட் வீசப்பட்டசம்பவத்தைக் கண்டித்து பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில்; மாணவர் விடுதி மீது கிரனைட் வீசப்பட்ட சம்பவம் அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம் இவ்வாறான செயல்கள் மூலம் மாணவர்களின் கருத்துச் சுதந்திரத்தை பறித்துவிட முடியாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று தெரிவிக்சப்பட்டுள்ளது (இ)

## நேற்று

சை முடிவுகள் தேர்ச்சி அறிக்கைகள் என்பனவற்றை பெற்றுக்கொள்ளவில்லை அத்துடன் விமானமூலம் யாழ்ப்பாணம் வந்த பயணிகள் தமது வீடுகளுக்கு செல்ல போக்குவரத்து இன்மையால் உறவினர் வீடுகளுக்கு நடந்து சென்றதை காணக்கூடியதாக இருந்தது

இதேவேளை ஹர்த்தாலுககுஅனுசரணையாகபோக்குவரத்துச் சேவை இடம்பெறுவதை தடுக்கும நோக்கில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கோண்டாவில் டிப்போக்குமுன்பாகஅமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சி அலுவலகங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தது யாழ் பல்கலைக்கழகத்தில் வாழைகள தோரணங்கள் கட்டப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் பட்டு ஒலிபெருக்கி மூலம் சோக கீதம இசைக்கப் பட்டிருந்தது மாணவர்களும் கறுப்புப்பட்டி அணிந்திருநதனர்.

இதேவேளை பூரணஹர்த்தாலினால் குடாநாடேஸ்தம்பிதமடைந்திருந்த நிலையிலும் வடமராட்சி மற்றும் இளவாலைப் பகுதிகளில்வன்முறைஅசம்பாவிதங்கள இடம்பெற்றுள்ளன

தமிழ்க்கட்சிகூட்டமைப்பாளர் மீது நடத்தப் பட்ட வன்முறைத் தாக்குதலைக் கண்டித்து திருகோணமலை மற்றும் மட்டக்களப்புமாவட்டங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டமை இங்கு குறிட்பிடத்தக்கது. (இ-10-259-104-106-229)

## சுட்டுக் கொலை

(வவுனியா)

வவுனியா தோணிக்கல் அம்மன்கோயிலுக்கு அருகாமையில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத துப்பாக்கிநபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் சுட்டுக்கொல்லப்பட்டவர் வவுனியா தோணிக்கல் சாட்டில் வசிக்கும் முகுந்தன் என அடையாளம் காணப் பட்டுள்ளார்.

(ம)

## வடமராட்சி

கலைத்ததாக தெரியவருகிறது.

தாக்குதலில் ஈடுபட்ட கோஷ்டியினர் வாள்கள் பொல்லுகளுடன் வந்ததாகவும் காரியாலயத்தில் இருந்து அறிவித்தல் பலகையை அடித்து நொருக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பருத்தித்துறையில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினரான சின்னராசா ஜெகன் (வயது-20) இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுயாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை தமது கட்சியைச் சேர்ந்த சின்னராசா ஜெகதீஸ்வரன் (வயது-22) சிவராசா பாபு[வயது26] ஆகியோர்கடத்தப்பட்டுளளதாக ஈ.பி.டி.பி அறிவித்துள்ளது.

இச் சம்பவங்களையடுத்து வடமராட்சிப்பகுதியில் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியபோதும் நிலைமைகட்டுப்பாட்டில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்குடாநாட்டில் முதுனையகாலங்களில் நடந்தேறி முடிந்த பொதுத் தேர்தல்களிலும் பார்க்க இம்முறை நடையெறவுள்ள தேர்தலிலேனே அதிக வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கி உள்ளதையும் அடுத்துவரும் நாட்களில் எதுவும் நடக்கலாம் என்றபயப்பீதியுடன் மக்கள் இருப்பதையும் அவதானிக்கமுடிகிறது.

(ம,2,10,41,229)

## நல்லூர் பிரதேச சபை

# வீதிகள் புனரமைப்பு

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட திருத்தப்பட வேண்டிய வீதிகள பொது மக்களினதும், அப்பகுதியின் பொது நிறுவனங்களினதும் வேண்டுதலுக்கு அமைவாக கீழ்க்காட்டப்படும் வீதிகள 2001 ஆண்டு திருத்த வேலை சபை நிதி மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

| இல. | வீதியின் பெயர் | அமைவிடம் |
|---|---|---|
| 01. | சீ சீ.ரி.எம்.எஸ் வீதி | கொக்குவில்மேற்கு |
| 02. | பொன்னையா வீதி | ,, ,, |
| 03. | மாதா கோவில் வீதி | ,, ,, |
| 04. | கோணாவளை வீதி | கொக்குவில் கிழக்கு |
| 05. | கலைவாணி மில் வீதி | ,, ,, |
| 06. | சருவப்புலம் வீதி | ,, ,, |
| 07. | பிரம்படி முதலாம் ஒழுங்கை | ,, ,, |
| 08. | பிரம்படி இரண்டாம் ஒழுங்கை | ,, ,, |
| 09. | கல்லூரி ஒழுங்கை | ,, ,, |
| 10. | அப்பையா வீதி | கொக்குவில் மேற்கு |
| 11. | மணியர்பதி முதலாம் ஒழுங்கை | ,, ,, |
| 12. | கேணியடி-சிவகுரு வீதி தொடர் | ,, ,, |
| 13. | பழம் வீதி | ஆனைக்கோட்டை |
| 14. | நந்தாவில் வீதி | கொக்குவில் கிழக்கு |
| 15. | மஞ்சத்தடி வீதி | இணுவில் |
| 16. | சேச்வீதிமுதலாம் இரண்டாம்குறுக்குவீதி | கொக்குவில் கிழக்கு |
| 17. | விக்கினேஸ்வரா பாடசாலைவீதி | உப்புமடம், கோண்டாவில்மேற்கு |
| 18. | புவனேஸ்வரி அம்பாள வீதி | ,, ,, |
| 19. | உடையார் வீதி குறுக்கு ஒழுங்கை | கொக்குவில் கிழக்கு |
| 20. | கோண்டாவில் வடக்கு பொதுக்கிணறு வீதி | கோண்டாவில் மத்தி; |
| 21. | நாமகள பாடசாலை வீதி | கொக்குவில் கிழக்கு |
| 22. | சென் செபஸ்தியார் தொடர் வீதி | கோண்டாவில் கிழக்கு |
| 23. | முந்தட்டு ஒழுங்கை | கோண்டாவில் மேற்கு |
| 24. | மணியகாரன் முதலாம் ஒழுங்கை | கொக்குவில் கிழக்கு |
| 25. | வாலையம்மன் வெள்ளைப் பிள்ளையார் வீதி | திருநெல்வேலி கிழக்கு |
| 26. | வீரபத்திரர் வீதி | நல்லூர் வடக்கு |
| 27. | மதவடி வீதி | கல்வயங்காடு |
| 28. | குளங்கரை வீதி | கோண்டாவில் கிழக்கு ஸ்ரேசனடி |
| 29. | கோவில் வீதி 1ம், 2ம், 3ம் குறுக்கு வீதிகள் | கொக்குவில் கிழக்கு |
| 30. | பரியாரியார் வீதி | கொக்குவில் கிழக்கு |
| 31. | சைவப்பாடசாலை 1ம், 2ம், 3ம், வீதிகள் | கோண்டாவில் மேற்கு |
| 32. | சிவகாமியம்மன் தொடர் வீதி | இணுவில் |
| 33. | பூதவராயர் கிளை வீதி | திருநெல்வேலி கிழக்கு |
| 34. | கலாசாலை வீதி 2ம், 3ம், 4ம் ஒழுங்கை | திருநெல்வேலி |
| 35. | முருகன் வீதி | திருநெல்வேலி |
| 36. | கேணியடி வீதி | திருநெல்வேலி |
| 37. | செனடி வீதி | திருநெல்வேலி |
| 38. | சைவப்பாடசாலை குறுக்கு வீதி | திருநெல்வேலி |
| 39. | லோட்டஸ் வீதி | கொக்குவில் மேற்கு |
| 40. | குமரகோட்டம்-நெட்டிலிப்பாய் வீதி | கோண்டாவில் மேற்கு |
| 41. | குமரகோட்டம்-வைத்திலிங்கம் வீதி | கோண்டாவில் மேற்கு |
| 42. | உதயசூரியன் ச. ச. நிலைய வீதி | காரைக்கால் இணுவில் |
| 43. | குமரகோட்டம்-காரைக்கால் வீதி | காரைக்கால் இணுவில் |
| 44. | பாலவிநாயகர் வீதி | கோண்டாவில் கிழக்கு |
| 45. | தொழில்நுட்பக்கல்லூரி-ரன்ஸ்போமர் ஒழுங்கை | பிறவுண் வீதிகொக்குவில் |
| 46. | தொழில்நுட்பக்கல்லூரி - வடக்கு வீதி | பிறவுண் வீதி கொக்குவில் |
| 47. | தோட்டவெளி வீதி | காரைக்கால் இணுவில் |
| 48. | ஐயனார் 1ம், 2ம், 3ம் குறுக்கு வீதி | கொக்குவில் மேற்கு |
| 49. | மகமாயி 1ம், 2ம், 3ம் குறுக்கு வீதி | கொக்குவில் கிழக்கு |
| 50. | திருநாவுக்கரசு வீதி | கொக்குவில் கிழக்கு |

**துரை. தவராஜா (J.P)**
உப தலைவர்
நல்லூர் பிரதேசசபை

தலைமைய லுவலகம்
பிரதேச சபை,
நல்லூர்
28-11-2001

[கி-2947]

தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகம்,
செயலகம்,
யாழ்ப்பாணம்.

# அரசாங்க அறிவித்தல்

## பாராளுமன்றத் தேர்தல் 05.12.2001

## உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகம்

பளை, கைதடி, சாவகச்சேரி ஆகிய அஞ்சல் அலுவலகப் பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த வாக்காளர்களின் நலன் கருதி அவர்களுக்குரிய உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் இன்று 2001.11.30ம் திகதியும் 2001.12.02ம் திகதியும் மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரைவிநியோகிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் இதுவரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெறத் தவறிய இப்பிரதேச இடம் பெயர்ந்த வாக்காளர் மேலே குறிப்பிட்ட திகதிகளில் மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்று அவற்றைப் பெற்றுக்கொள்ளும்படியும்இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

க. சண்முகநாதன்
தெரிவத்தாட்சி அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல. 10—யாழ்ப்பாணம்.
29. 11. 2001

(கி/2948)

# ஈ. பி. டி. பியின்செயலுக்கு மக்கள் பாடம் புகட்டுவர்

## முன்னாள் எம்.பி.மகேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மீது நேற்று முற்பகல் ஈ பி டி பி காடையர்கள் நடத்திய தாக்குதலுக்கும், அவர்களால் படுகொலை செய்யப்பட்ட பல்கலைக் கழக ஊழியருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு ஐ.தே.கட்சியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் எம் பியுமான தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்-

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்தவாரம் ஐ.தே.கட்சியினர் மீது ஸ்ரான்லி வீதியிலும், வட்டுக்கோட்டை சங்கரத்தையிலும், நேற்று தீவகத்தில் கூட்டமைப்பினர் மீதும் வன்முறையில் ஈ பி டி பியினர் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் இத்தகைய செயல்களுக்கு, எதிர்வரும் டிசம்பர் 5 ம் திகதி நிச்சயம் மக்கள் நல்லபாடம் புகட்டுவர் என்று குறிப்பிட்டார்:

(இ

# நாரந்தனைச் சம்பவம் மிலேச்சத்தனமான செயல்

## விநாயகமூர்த்தி கண்டனம்

நேற்று முன்தினம் ஈ.பி.டி பியினரால் தமிழ்க்கூட்டமைப்பின் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான காட்டுமிராண்டித் தனமான செயலுக்கு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பிலும் என் சார்பிலும் வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேலாவது ஈ.பி டி பி யினருக்குவழங்கப்பட்டுள்ள ஆயுதங்களை அரசு உடனடியாகமீளப்பெற வேண்டுமெனகேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு காங்கிரஸ் தலைவரும் வேட்பாளருமான அ. விநாயகமூர்த்திநேற்றுவிடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார் அதில அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

இந்தக் காட்டுமிராண்டித் தனமான செயலுக்கு ஈ.பி டி பி. யேமுழுப் பொறுப்பாகும்

இச் சூழ்நிலையில் ஊர்காவற்துறை தொகுதியில் அரசானது தேர்தலை நடத்தக் கூடாது. இக்காடைச் செயலால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ந

## திட்டமிட்ட அடாவடித்தனங்களை

# ஜனநாயக வாதிகளால் ஏற்றுக்கொள்ள முடியாது

## வேட்பாளர் செந்திவேல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மிக மோசமான அராஜக செயல் ஜனநாயகத்தை நேசிக்கும் எவரும் இது போன்ற அடாவடித்தனமான திட்டமிட்ட தாக்குதலை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டமைப்பினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து ஜனநாயக இடதுசாரி முன்னணியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர். சி. கா. செந்திவேல் வெளியிட்ட அறிக்கையில் கண்டித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தம மீது தாக்குதல் நடத்தியவர்கள் ஈ. பி. டி பியினர் என்று தமிழர் விடுதலைக் கூட்டமைப்பினர்தெரிவிக்கின்றனர்.

கூட்டமைப்பாளருக்குஉயிர் ஆபத்து ஏற்படும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

(09 ஆம் பக்கம் பார்க்க]

# கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ் கூடைப்பந்தாட்டச் சங்கம கழகங்கள், பாடசாலைகளிடையே நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றுபி.ப 3.30மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் மோதவுள்ள பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு

யாழ் மத்தியகல்லூரி Blues) எதிர் யாழ்ப்பாணக்கல்லூரி பி அணி

சென்பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யாழ்ப்பணக்கல்லூரி ஏ அணி

(உ-2)

# தேர்தல் ஆணையாளர் மீதான குற்றச்சாட்டு ஆதாரமற்றது;

## கருஜெயசூரியா கண்டனம்

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்

தேர்தல் ஆணையாளரை பதவியில் இருந்து விலகுமாறு கோரி பொதுஜன ஐக்கிய முன்னணியின் 8முக்கிய அமைச்சர் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தனர்.

இது தொடர்பாககரு ஜெயசூரியாவிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் ஆணையாளர் பக்கச் சார்பின்றி நடந்து கொள்வதை பொதுஜனஐக்கிய முன்னணியினரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

இதனாலேயே அவரை பதவி விலகக் கோருகின்றனர்.

அத்துடன், தேர்தல் மோசடிகளில் ஈடுபட அவர் தடையாக இருப்பதாலுமே அவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதாக மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-5)

# வன்முறையில் வாக்குப்பெறுவது மக்களை துன்புறுத்தும் செயல்!

## புளொட் அமைப்பு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் தீவுப்பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது ஜனநாயகத்திற்கு விழுந்த ஒரு அடியாகவே காணப்படுகிறது

இவ்வாறுபுளொட்அமைப்பு நாரந்தனையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

தொடர்ந்து கொண்டிருக்கும் போரினால் அல்லலுற்று அமைதியற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மக்கள் தமக்கு ஒரு விடிவு பிறக்காதா எனஏங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தீவுப்பகுதியின் ராஜாக்கள் நாமே என ஒரு பகுதியினர் காட்டுத்தர்பார் நடத்துவதும் இன்னொரு பகுதியினர் தீவுப்பகுதி மக்களை மீட்கப்போகும் இரட்சகர்களாக தங்களைக் காட்டிக்கொண்டு அறிக்கைப் போர்கள் நடத்துவதும், தேர்தல் காலங்களில் இப்படியான நிகழ்வுகள் அதிகமாக நடைபெறுவதும், அப்பகுதியில் வாழும் மக்களை மேலும் துன்பமுறச் செய்யும் ஒரு நடவடிக்கையாகவே கருத வேண்டியுள்ளது.

கடந்த 25 ந் திகதி எமது அமைப்பு தீவுப்பகுதியில்பிரசார வேலைகளுக்கு சென்ற போது இப்படியான ஒரு சம்பவம் வேலணையில் நடைபெற்றது.

ஆனால் நாம் அவ்விடத்தில் எவ்வித பதில்நடவடிக்கையும் எடுக்காமல் எம்முடன் வந்த எமது ஆதரவாளர்களின் பாதுகாப்புக்கருதி அவ்விடத்திலிருந்து வெளியேறினோம்.

மற்றவர்களின் ஜனநாயகக் கருத்துக்கள் மதிக்கப்படாததன் விளைவே இந் நிகழ்வுகளாகும்.

எனவே இப்படியான நிகழ்வுகள் பிரச்சினைகளை மேலும் சிக்கலடையச் செய்வதுடன் மக்களை மேலும் குழப்பமடையச் செய்துவிடும் இக்காட்டுமிராண்டித் தனமான செயலைஎமது அமைப்பு வன்மையாகக் கண்டிப்பதுடன், எதிர்காலத்தில் இப்படியான நிகழ்வுகள் ஏற்படாமலிருக்க அனைத்து மக்களும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம் அத்துடன், இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட பேரம்பலம் அவர்களின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் இச்சம்பவத்தில் காயமடைந்த ஏனையவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமென்றும் இறைவனைப்பிரார்த்திக்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(இ)

# வன்முறைக் கலாசாரத்தை முறியடிக்க வேண்டும்

## மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

கடந்த புதனன்று நாரந்தனைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிருக்கின்றோம்.

இப்படியான அநாகரிகமான வன்முறைக் கலாசாரம் பரவுவதை மக்கள் அனைவரும இணைந்து முறியடிக்க வேண்டும்.

கூட்டணி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் நாரந்தனைப் பகுதியில் வைத்து கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டமை மற்றும் கொல்லப்பட்டமை தொடர்பாக மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் வன்முறைகள் மேலோங்குவதைப் பார்த்து வாளாவிருந்தால் நாட்டில் தன்மானத்துடன் நாம் வாழமுடியாத நிலை விரைவில் உருவாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[உ]

# உரிமைகளை வன்முறையால் தடுக்க முடியாது

## சுபத்திரன் கண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனநாயக அரசியல் கட்சிகள மக்கள மத்தியில் தடையின்றி எங்கும் சென்று வருவதற்கும், தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கும அனைவருக்கும உரிமை உண்டு. இதனை வன்முறைகள் மூலம் தடுப்பது தாக்குதல் நிகழ்த்துவது வன்மையான கண்டனத்துக்குரிய விடயம்.

நேற்று முன்தினம் நாரந்தனைப பகுதியில் தமிழ்க்கட்சி கூட்டமைபபினர் மீது மேற்கொள்ளப்பட்ட ஆயுத வன்முறையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்

இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எவ். வரதர் அணியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் த. சுபத்திரன் (றொபேட்) தெரிவித்துள்ளார்.

நாரந்தனைப் பகுதிச்சம்பவம குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இன்று நாகரிகமான அரசியல் கலாசாரம் இல்லாத சூழ்நிலை காணப்படுகிறது. ஜனநாயக ரீதியில் பக்குவமாக கொள்கைகளை. கருத்துக்களை வெளிப்படுத்தாமல் கருத்து வன்முறையாக அவதூறு செய்கின்ற வகையில், கருத்து வெளியிடுவதையும் நாம் கண்டிப்பதோடு அதனை தவிர்க்க வேண்டுமெனவும் கேட்டுக் கொளகிறோம்.

கடந்த 15 வருடங்களாக சுதந்திரமாக கருத்துக் தெரிவிப்பவர்கள் மீதும மாற்றுக் கருத்தை முன்வைப்பவர்கள் மீதும்தாக்குதல்கள் வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இதனை விடுத்து கருத்துகளை கருத்துக்களால் எதிர்கொள்ளும்நிலைமைஇங்குஉருவாக வேண்டும். கண்ணியமான ஒரு அரசியல் கலாசாரத்தை பின்பற்றி அதனை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசியல் கட்சிகள் அனைத்தினதும் கடமையுமாகும்.

ஆயுதப் போராட்டத்தில் ஆயுத மேலாதிக்கவன்முறை தோன்றியதால் போராட்டம் திசை திரும்பியது. அதே போன்று அரசியல் ஜனநாயகத்தில் வன்முறைதோன்றி அதுவும திசைமாறிச் செல்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவத்தில் கொல்லப்பட்ட இருவரதும் குடும்பத்தவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

# தேர்தல்வன்முறை 1437 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்று வரை ஆயிரத்து 437 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் பொலிஸ் கண்காணிப்புதலைமையகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி 726 முறைப்பாடுகளையும். பொதுஜன ஐக்கியமுன்னணி 484முறைப்பாடுகளையும்,மக்கள் விடுதலைமுன்னணி 71 முறைப்படுகளையும் சிறிலங்காமுஸ்லிம் காங்கிரஸ் 50 முறைப்பாடுகளையும்செய்துள்ளதாக பொலிஸ் கண்காணிப்பு தலைமையகம் மேலும் அறிவித்துள்ளது.

சிலாபம் அனுராதபுரம் ஆகிய பகுதிகளிலேயே வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-4)

# சிகிச்சை 3 ஆம் திகதி

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலையில் எதிர்வரும் தேர்தல் தினமான 5 ஆம் திகதி இடம்பெறவிருந்த சிகிச்சைகள் யாவும் முன்னதாக 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளதுதாகக் அறிவிக்கப்பட்டுள்ளது[ உ-75]

# அ.அட்டை கண்டெடுப்பு

[யாழ்ப்பாணம]

கோப்பாயைச் சேர்ந்த சி. கிருபாயினி என்பவரது ''அஞ்சல் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ''வலம்புரி'' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

# விவாதப்பயிற்சி பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ் மதிய கல்லூரியின் தம்பா மண்டபத்தில இன்று காலை 8.30 மணிக்கு இ.விநோதராஜ் தலைமையில் விவாதப்பயிற்சிப் பட்டறை இடம்பெறவுள்ளதால். அனைத்து கல்லூரி மாணவர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகு

அறிவித்தல்

30. 11. 2001 அன்று நடைபெறவிருந்த வெளிவாரி பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வு நடைபெறும் திகதி பின்பு அறிவிக்கப்படும்.

பதிவாளர்

29. 11. 2001.

[C-2945]

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து
குறள்

வலம்புரி

## அமைதி பேணவும்

தீவகத்து ஊர்காவற்றுறைக்குச்சென்ற தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு மீது நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்மூடித்தனமான தாக்குதலில் அப்பாவி ஒருவரின் உயிர் பறிக்கப்பட்டுள்ளது. பலர் படுகாயமுற்றுள்ளனர்.

ஷெல் தாக்குதல், விமானக் குண்டுத்தாக்குதல் என்பவற்றுக்கு எத்தனையோ உயிர்களை பலிகொடுத்தயாழ்ப்பாணத்து மக்கள் இப்போது தேர்தல் வன்முறைக்கு ஒருவரைப் பலி கொடுத்திருப்பது மிகவும் வேதனைதரும் விடயமாகும்.

ஒரு புறத்தில் மண் மீட்பிற்காகப்- போராட்டம் நடந்து கொண்டிருக்க, அப்போராட்டத்திற்கு உந்துசக்தியாக இருக்கும் மக்கள் அரசின் பொருளாதாரதடையால்ஒருவேளை உணவுக்கு ஏங்கி நிற்கும் போது, யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரங்களுக்காக கட்சிகள் காசை அள்ளிக் கொட்டுவதும், ஆதரவாளர்கள் என்ற போர்வையில் ஏதும் அறியாத இளைஞர்களை தத்தம் கட்சிகளில் இணைத்து அவர்களின்கைகளில் மயில் தாள்களை திணித்துவிட்டு அடாவடித்தனங்களை தூண்டுவதும் யுத்தத்தால் நொந்து போயுள்ள மக்களுக்கு வேதனையையும் அதேவேளை பயப்பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு கட்சிகளும் தத்தம் கொள்கைகளையும், எதிர்காலத் திட்டங்களையும் மக்கள் முன்வைத்து வாக்கு கேட்பதைவிடுத்து, தாக்குதல் நடத்துவதன் மூலமாகவோ, அல்லது தாக்குதலை வலிந்துஏற்படுத்தி அதன்மூலமாகவோ வாக்குகளை பெற்றுக் கொள்ள நினைப்பது நொந்து போயுள்ளதமிழ் பெரும்மக்களுக்கு செய்கின்ற துரோகமாகும்.

தேர்தல் வன்முறை என்ற பேரில், யாழ் பல்கலைக்கழக ஊழியர் பேரம்பலம் பலியானதும் அதனைத் தொடர்ந்து நேற்று வடமராட்சி, மற்றும், இளவாலைப்பகுதிகளில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களும் பொது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை உண்டுபண்ணியுள்ளது

எனவே தேர்தலிலகுதித்துள்ள கட்சிகள் அமைதியைக் கடைப்பிடித்து அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும் என்பதுடன் அரசசார்பற்ற நிறுவனங்களும் இது விடயத்தில் தலையிட்டு அமைதியைநிலை நாட்ட முன்வர வேண்டும்.

---

வெள்ளி நற்சிந்தனை

# ஞான ஒளியேற்றிமாயை என்னும் இருளைநீக்க

# தீபத திருநாளில் திடசங்கற்பம் பூணுவோம்



கார்த்திகை மாதத்தில் விரதம் அனுட்டித்து வழிபாடு செய்ப உகந்த திருநாட்களுள் திருக்கார்த்திகைத்திருநாளும் ஒன்றாகும். ஞானஒளியேற்றி மாயையெனும் இருளை அகற்றும் தீபத்திருநாள் இதுவேயாகும். இன்று திருக்கார்த்திகை விளக்கீட்டுத்திருநாள்.

கார்த்திகை விரதம்என்பது கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரம் முதலாக மாதந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் முருகப் பெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதம். இவற்றுள் கார்த்திகை மாதத்துவிரதமே சிறப்புப் பெற்ற திருக்கார்த்திகை எனவும் விளக்கீடு எனவும் பெயர்பெறுகின்றது

### சோதி வடிவம்

சிவராத்திரித்திருநாளில்சிவபெருமான் பிரம்மாவிற்கும், விஷ்ணுவுக்கும் தமது ஒளிமயமானசோதிவடிவைக்காட்டிய பொழுதுஅவ்வடிவைத்தமக்கு எப்பொழுதும் காட்டியருள வேண்டுமென அவர்கள்வேண்டினர். அதற்கு இறைவன் திருக்கார்த்திகை நாளில்மீண்டும் இவ்வுருவைக் காட்டுவோம் என்றார் இதன்நினைவாகவே திருக்கார்த்திகை கொண்டாடப் படுகிறது.

மேலும் திருவண்ணாமலைத் தலத்தில் மலையுச்சியில் பெருந்தீபம் ஏற்றப் படுகிறது. இதனைப் பல ஊர்களிலுமுள்ள பல்லாயிரக்கணக்கானோர் இறைவனின் சோதி வடிவைத் தரிசிப்பர். எம் ஆலயங்கள் யாவற்றிலும் நடைபெறும் சொக்கப்பானை உற்சவத்தைத் தரிசிப்பதன் மூலம் திருவண்ணாமலைத் தீபத்தைத்தரிசித்தபேறடையலாம் என்றும் கருதுவார்கள்.

'உள்ளத்தில் உண்மை ஒளி ஏற்படின்வாக்கினிலே ஒளி உண்டாகும். என்றார்மக்கள் கவிபாரதியார் 'நான், நான்' என்ற எண்ணம்தான் உள்ளத்தில் இருளைத் தருவது 'நான் செய்தேன், நான்சம்பாதித்தேன், நான் எல்லோரையும் காப்பாற்றினேன், நான் மிகவும் சமர்த்தன்,' என்றஇருள் மயமான ஆணவ எண்ணங்களை அடியோடு நாம்அகற்ற வேண்டும். இந்த 'நான் 'என்கிற இருள் என்று நீங்குகிறதோ அன்றே ஞானஒளி தலைப்படும். நான் என்றஎண்ணம்கெட்டழிந்தவுடனே துன்பம் முழுவதும் நீங்கப் பெற்று அருட்பெருஞ்சோதி தரிசனம் உண்டாகும் ஆனந்தம் உதிக்கும். என்றும் அழியா இன்பம் தோன்றும். ஆகவேஇன்றைய விளக்கீட்டுத் திருநாளில் புறத்திலே ஒளியை ஏற்றி எமது அகத்திலேயும் ஒளிமயமான தூய குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்

**சமூகஜோதி கா. கணேசதாசன்**

### தீபஜோதியின் தத்துவம்

ஒருதீபஒளியை ஏற்றிமேட்டில் வைத்தாலும் பள்ளத்தில் வைத்தாலும் அதன் ஜோதி மேல் நோக்கித்தான் எரியும். இத்தீபத்தின் ஜோதிக்கு இரண்டு முக்கியமான குணங்கள் உண்டு ஒன்று இருளை அகற்றுவதும் மற்றொன்று தொடர்ந்து எமது வாழ்க்கை மேல் நோக்கி முன்னேற வழிகாட்ட வேண்டுமென்பதுமாகும்.

தீபத்தின்ஒளிமேல்நோக்கிச் செல்வது ஞானத்தின் பாதையையும் பின்னர் அதுவேதெய்வீகத்தின் பாதையையும் சுட்டிக் காட்டுவதாக அருளாளர்கள் சுற்றுத் தந்துள்ளனர். இறைவனுக்கு தீப ஒளியைக் காட்டி வணங்கினால இறைவனும் ஒளிமயமான நல்வாழ்வை எமக்குத்தருவானல்லவா?

புனித ஒளிமயமான இனிய வார்த்தைகளைப் பேசவேண்டும். புனிதமான நற்செயல்களில் ஈடுபட வேண்டும். இதுவே தீபஜோதியை வணங்குவதன் தத்துவமாகும்.

### விளக்கேற்றல்

விளக்கீட்டுத் தினத்தில் விரதமிருந்து தேன், தினைமா சேர்த்து மாவிளக்கு இட்டு பூசிப்பர். வீடுகளில் அழகிய கோலங்களைப்போட்டு அதன் மீது அகல் விளக்குகளைஏற்றி வைப்பதுடன் சிறு சிறு பந்தங்களையும் ஏற்றி வீட்டுவளவையும் மற்றும் இடங்களையும் ஒளியேற்றுவர்.

இன்றைய சூழ்நிலையில் நாம் அனைவரும் சாந்தி, சமாதானம், அமைதி வேண்டி இறைவனை ஒளியேற்றி வழிபட்டால் எமக்கு அருள் புரிவான் என்பதை இத்தினத்தில் நாம் உணர வேண்டும். □

---

அச்சுவேலி சிறுவர் நன்னடத்தை

# பாடசாலையை மீள இயக்குவது குறித்து

# அரச சார்பற்ற நிறுவனங்கள் வலியுறுத்து

[தென்மராட்சி]

யாழ் குடாநாட்டில் சிறுவர்நன்னடத்தைப்பாடசாலை ஒன்று அவசியம் ஆரம்பிக்கப்படல வேண்டும் என சிறுவர் நலன்களில் ஆர்வமுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் உரிய திணைக்களத்தின் கவனத்துக்கு எடுத்துகூறியுள்ளன.

குடாநாட்டில் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் அச்சுவேலியில் இயங்கி வந்த சிறுவர் நன்னடத்தைப் பாடசாலை, தொடர்ந்தும் இடம் பெற்று வந்த வன்செயல்கள் காரணமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் துர்நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற சிறுவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமெதுவும் இல்லாமல் இருப்பது தெரிந்ததே

மேலும், குடாநாட்டில் இத்தகைய பாடசாலை ஒன்றினை ஆரம்பிக்கும்படி சிறுவர் பராமரிப்பு நிறுவனம், யூனிசெவ் நிறுவனம் ஆகியனவே அரசைக்கோரியுள்ளதாக தெரியவருகின்றது. [உ-77]

---

மனித உரிமைகள் தினத்தில்

# காணாமற் போனோர் பாதுகாவலர் சங்க ஏற்பாட்டில் ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

மனிதஉரிமைகள் தினமான எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம்திகதி வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் துக்கத்தை அனுஷ்டிக்கும்வகையில் ஹர்த்தாலை ஏற்பாடு செய்துள்ளது.

அன்றையதினம சங்க அங்கத்தவர்கள் வாயிலும் இடுப்பிலும் கறுப்பு பட்டியை அணிந்தபடி கையில் விளக்கேந்தி நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தைச் சென்றடைவர். அங்கு அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்திலும் குதிக்கவுள்ளனர்.

இப்போராட்டத்திற்கு பல்கலைக்கழக மாணவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் ஆதரவு தெரிவிக்க உள்ளனர்.

கைதுசெய்யப்பட்டோரில்167 பேர் வன்செயல்களில் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று அறிவிப்பு வெளிவந்துள்ள நிலையில் இவர்கள் எக்காரணத்துக்காக எவரால் கொலைசெய்யப்பட்டார்கள். 1996 இற்குப்பின்னர் யாழில் வன்முறை இடம்பெற்றதா? என்பதைத் தெளிவுபடுத்தவேண்டிய பொறுப்பு அரசுக்கு உரியது என்று சங்க செயலாளர் ப. சற்குணம் நேற்று முன்தினம்நல்லூரில் நடைபெற்ற சங்கக்கூட்டத்தில்தெரிவித்தார். (உ-106)

---

### தினசரி தியானம்

# தொண்டன்

அன்புறு சிந்தையராகியடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவி நின்று
இன்புறுமெந்தை இணையடியேத்துவார்
துன்புறு வாரல்லதொண்டு செய்வாரே.

**திருஞானசம்பந்தர்**

உனக்குத் தொண்டு புரிந்தே நின் அன்பர்கள் எல்லாம் உனக்குரியவர் ஆயினர். நான் யாண்டும்தொண்டனாயிருக்கக் கற்றுக் கொள்வேனாக.

மேடு லில இருக்கும் சிற்றாறு எல்லாம் பள்ளத்தில் இருக்கும் பேராற்றில் கலக்கின்றன. உயிர்கள் எல்லாம் தொண்டனுக்குச் சொந்தமாகி விடுகின்றன. மற்றவர்களுக்கு அவன் தலைவன் எனினும் தலைச் சுமை போன்று அவன் யாருக்கும் தொந்தரவு கொடுப்பதில்லை மற்றவர்களுக்கு அவன் முன்நிற்பவன். எனினும் யாருக்கும் இடைஞ்சல் செய்வதில்லை. தொண்டன் யாருக்கும் எதிரியல்லன்.

**ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.**

---

### ஜனநாயகவாதிகளால்

(8ம பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல் தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என்றே கொள்ள வேண்டும். இத்தாக்குதலில் உயிரிழந்தவருக்கும் காயமடைந்த வேட்பாளர்கள் ஆதரவாளர்களுக்கும் அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவிக்கின்றோமென்று கூறினார். [இ]

### தேர்தல்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

முறை நடப்பதைத் தவிர்க்க வேண்டும்.

தீவுப்பகுதியில் நடக்கப் போவதாக எதிர்பார்க்கப் படும் வன்முறைகள்குறித்தும் அவர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனார். (உ01-6)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

## யாழ். மாவட்ட தமிழ் வேட்பாளர்

## ஞா. ஆனந்தகுமார்



யாழ் வாழ் மக்களே! நன்கு சிந்தித்து எதிர்வரும் 5ம் திகதி வாக்களிக்க தயாராகுங்கள்.

உங்கள் தெரிவு ஆனந்தகுமாராக இருக்கட்டும்
தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்கு எதிராக செயற்படுவோரை இனங்காண்போம்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதித்துவம் விடுதலைப் புலிகள்தான் என்பதை சர்வதேசிய சமூகத்தின் மத்தியிலும் உள்நாட்டிலும் நிலை நிறுத்துவோம்.


தமிழ் பேசும் மக்களை அரசியல் ரீதியாக ஏமாற்றியவர்களை இனங்காண்போம்.

வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் தமிழர் உரிமைப் போரா டத்தை விற்று சிங்கள பெருந் தேசியத்தைகாத்தவர், இதனை உலக நாடுகளுக்கு வெளிப்படுத்தி தமிழர் உரிமைகளை கா திடுவோம்.

வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்திற்கு சுபீட்சத்திற்கும் நிறைவேற்று உரிமை கொண்டவர்கள் விடு லைப் புலிகள்தான் என்பதை வலியுறுத்துவோம்.

★ டிசம்பர் 5ம் திகதி ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஏகோபித்த வாக்குகளை ஞா. ஆனந்தகுமாருக்கு அளித்து உங்களது உரிமைகளை வென்றெடுக்கவும் உங்களின் காக்கும கரமாக விளங்கவும் பாராளுமன் றம் அனுப்பி வையுங்கள்.

**ஞா. ஆனந்தகுமாரின் வெற்றி உங்களின் வெற்றி**



[4034]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.